1DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.38 of 2025**

| | | |
|---|---|---|
| Deposition of P.W.10 (L.W.11) | } | Prosecution |
| | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | திரு. ராகுல்கண்ணன் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 06.04.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.05.2024ம் தேதி மாரண்டஹள்ளி காவல்

நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது, காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜீவானந்தம் என்பவருடன் என்னையும் முதல்நிலை காவலர் 322 சம்பத் என்பவரையும் மாரண்டஹள்கி காவல் நிலைய குற்ற எண். 98/2024 இதச 147, 148, 294(b), 324, 307 IPC வழக்கின் எதிரிகளை கைது செய்ய வேண்டி தனி அலுவலாக பணியமர்த்தப்பட்டேன். நாங்கள் எங்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜீவானந்தம் அவர்களுடன் காரில் திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு அடுத்து தானிப்பாடி பஸ் நிலையத்தில் வழக்கின் 1ம் எதிரி கோவிந்தசாமி, 3ம் எதிரி ரவி ஆகியோரை தகவலர் எங்களுக்கு அடையாளம் காட்ட காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜீவானந்தம் அவர்கள் கைதுக்கான காரணம் கூறி அவர்களை 13.00 மணிக்கு அங்கேயே கைது செய்தார். பிறகு 3ம் எதிரி ரவி என்பவரிடம் OPPO A79 5G செல்போன் கைப்பற்றினார். அந்த போன் என்ன நிறம் என்று எனக்கு தற்போது நினைவில்லை. பிறகு 13.30 மணிக்கு கைப்பற்றிய செல்போனை மகஜர் ஒன்றை தயார் செய்து தனி நபர் சாட்சி யாரும் முன் வராததால் எங்களிடம் கையொப்பமிட சொன்னார். நாங்கள் கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (1,7 எதிரிகள் தரப்பில்)**

1) என்னை தனி அலுவலுக்காக நியமிப்பதற்கு காவல் ஆய்வாளருக்கு அதிகாரம் இல்லை என்றாலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் தனி அலுவலில் அனுப்புவதற்கு உரிமை இல்லை என்றாலும் அதன் அடிப்படையில் நான் செய்த விசாரணை சட்டப்படியானது இல்லை என்றால் சரியல்ல, காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில்தான் நான் செய்தேன். தனி அமைப்பு உத்தரவு வாய் மூலமானது அல்லது எழுத்து மூலமானதா என்று என்னுடைய நீதிமன்ற விசாரணையிலும் போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) அடையாளம் காட்டிய நபர் திருவண்ணாமலையிலேயே இருந்தார். எதிரி காவலர்கள் அனைவரும் தருமபுரி மாவட்டம் மாரண்டஹள்ளி சேர்ந்த நபர்களாக இருக்கும்பட்சத்தில் இரண்டு மாவட்டத்தை கடந்து அப்பால் உள்ள ஒரு தகவலாளி அடையாளம் காட்டியதை ஏற்புடையதும் அல்ல நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட போன் என்ன நிறம் என்று என்னால் சரியாக சொல்ல இயலாது. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் என் முன்னிலையில் நான் சொல்வது போல கைப்பற்றப்படவில்லை என்பதால்தான் போனின் நிறம் என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தருமபுரியிலிருந்து திருவண்ணாமலை மாவட்டம் போயிருந்தால் அதற்குண்டான ஆவணங்கள் இருக்கும் என்றும் அது மாதிரி நான் செல்லாததால்தான் அதற்கான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (2,5 எதிரிகள் தரப்பில்)**

நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லி இருப்பது போல 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்த இடம் பேருந்து நிலையம். பேருந்து நிலையத்தின் உள்ளே தான் சான்றுபொருள் கைப்பற்றப்பட்டது. என் முன்னிலையில் சான்று பொருள் கைப்பற்றியிருந்தாலும் எதிரியை கைது செய்திருந்தாலும் அதன் விவரம் எனக்கு தெரியும் என்றாலும் எனக்கு சரியாக தெரியாததால்தான் எந்த சான்றுபொருளும் என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. என் உயர் அதிகாரிகள் கேட்டு கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (3,4,6 எதிரிகள் தரப்பில்)**

எதிரிகளை கைது செய்து சான்று பொருளை கைப்பற்றிய இடம் பொது மக்கள் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக இருக்க பொது மக்கள் யாரும் முன்வரவில்லை என்று சொல்லி உள்ள நிலையில் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியாக இருக்க தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் உயர் அதிகாரி என்னை சாட்சி கையெழுத்து போட சொன்னதால் நான் போட்டேன். நான் சொல்வது போல் சட்ட விதிகள் உட்பட்டு எதிரிகளை கைது செய்யவில்லை, சான்று பொருள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. என் உயர் அதிகாரிகள் கேட்டு கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(மேற்படி குறுக்கு விசாரணையை 3,4,6 தரப்பு வழக்கறிஞர் ஏற்று கொண்டார்)

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.38 of 2025**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W.11 (L.W.12) | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | திரு. சம்பத் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 06.04.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் காரிமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.05.2024ம் தேதி மாரண்டஹள்ளி காவல் நிலையத்தில்

முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது, காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜீவானந்தம் என்பவருடன் என்னையும் முதல்நிலை காவலர் 322 சம்பத் என்பவரையும் மாரண்டஹள்கி காவல் நிலைய குற்ற எண். 98/2024 இதச 147, 148, 294(b), 324, 307 IPC வழக்கின் எதிரிகளை கைது செய்ய வேண்டி தனி அலுவலாக பணியமர்த்தப்பட்டேன். நாங்கள் எங்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜீவானந்தம் அவர்களுடன் காரில் திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு அடுத்து தானிப்பாடி பஸ் நிலையத்தில் வழக்கின் 1ம் எதிரி கோவிந்தசாமி, 3ம் எதிரி ரவி ஆகியோரை தகவலர் எங்களுக்கு அடையாளம் காட்ட காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜீவானந்தம் அவர்கள் கைதுக்கான காரணம் கூறி அவர்களை 13.00 மணிக்கு அங்கேயே கைது செய்தார். பிறகு 3ம் எதிரி ரவி என்பவரிடம் OPPO A79 5G செல்போன் கைப்பற்றினார். அந்த போன் என்ன நிறம் என்று எனக்கு தற்போது நினைவில்லை. பிறகு 13.30 மணிக்கு கைப்பற்றிய செல்போனை மகஜர் ஒன்றை தயார் செய்து தனி நபர் சாட்சி யாரும் முன் வராததால் எங்களிடம் கையொப்பமிட சொன்னார். நாங்கள் கையொப்பம் இட்டோம்.

**குறுக்கு விசாரணை (1,7 எதிரிகள் தரப்பில்)**

1) என்னை தனி அலுவலுக்காக நியமிப்பதற்கு காவல் ஆய்வாளருக்கு அதிகாரம் இல்லை என்றாலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் தனி அலுவலில் அனுப்புவதற்கு உரிமை இல்லை என்றாலும் அதன் அடிப்படையில் நான் செய்த விசாரணை சட்டப்படியானது இல்லை என்றால் சரியல்ல, காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில்தான் நான் செய்தேன். தனி அமைப்பு உத்தரவு வாய் மூலமானது அல்லது எழுத்து மூலமானதா என்று என்னுடைய நீதிமன்ற விசாரணையிலும் போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) அடையாளம் காட்டிய நபர் திருவண்ணாமலையிலேயே இருந்தார். எதிரி காவலர்கள் அனைவரும் தருமபுரி மாவட்டம் மாரண்டஹள்ளி சேர்ந்த நபர்களாக இருக்கும்பட்சத்தில் இரண்டு மாவட்டத்தை கடந்து அப்பால் உள்ள ஒரு தகவலாளி அடையாளம் காட்டியதை ஏற்புடையதும் அல்ல நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்ல. தகவலாளி விவரங்கள் எனக்கு தெரியாது. காவல் உதவி ஆய்வாளருக்குத்தான் தெரியும். தகவலாளியை நான் பார்க்கவில்லை. காவல் உதவி ஆய்வாளர் தகவல் சொன்னதன் பேரில் 1ம் எதிரியை அடையாளம் காட்டி பிடித்து வைத்திருந்தார். பின்பு தகவல் சொல்லி நாங்கள் அங்கு போனோம். நான் தற்போது

சொல்லி உள்ள எந்த விவரமும் போலீஸ் விசாரணையில் சொல்லாததால் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட போன் என்ன நிறம் என்று என்னால் சரியாக சொல்ல இயலாது. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் என் முன்னிலையில் நான் சொல்வது போல கைப்பற்றப்படவில்லை என்பதால்தான் போனின் நிறம் என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தருமபுரியிலிருந்து திருவண்ணாமலை மாவட்டம் போயிருந்தால் அதற்குண்டான ஆவணங்கள் இருக்கும் என்றும் அது மாதிரி நான் செல்லாததால்தான் அதற்கான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 1,3 எதிரிகளை சட்டத்திற்கு முரணாக கைது செய்யப்பட்டுள்ளார் என்றாலும் அதற்கு நானும் சாட்சி ராகுல்கண்ணன் என்பவரும் உடந்தையாக இருந்தோம் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (2,5 எதிரிகள் தரப்பில்)**

நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லி இருப்பது போல 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்த இடம் பேருந்து நிலையம். பேருந்து நிலையத்தின் உள்ளே தான் சான்றுபொருள் கைப்பற்றப்பட்டது. என்

முன்னிலையில் சான்று பொருள் கைப்பற்றியிருந்தாலும் எதிரியை கைது செய்திருந்தாலும் அதன் விவரம் எனக்கு தெரியும் என்றாலும் எனக்கு சரியாக தெரியாததால்தான் எந்த சான்றுபொருளும் என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. என் உயர் அதிகாரிகள் கேட்டு கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (3,4,6 எதிரிகள் தரப்பில்)**

எதிரிகளை கைது செய்து சான்று பொருளை கைப்பற்றிய இடம் பொது மக்கள் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக இருக்க பொது மக்கள் யாரும் முன்வரவில்லை என்று சொல்லி உள்ள நிலையில் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியாக இருக்க தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் உயர் அதிகாரி என்னை சாட்சி கையெழுத்து போட சொன்னதால் நான் போட்டேன். நான் சொல்வது போல் சட்ட விதிகள் உட்பட்டு எதிரிகளை கைது செய்யவில்லை, சான்று பொருள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. என் உயர் அதிகாரிகள் கேட்டு கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(மேற்படி குறுக்கு விசாரணையை 3,4,6 தரப்பு வழக்கறிஞர் ஏற்று கொண்டார்)**

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.38 of 2025**

| | | |
|---|---|---|
| Deposition of P.W.12 (L.W.13) | } Prosecution<br>} Defence<br>} | |
| Name of the Witness | : | திரு. ராஜி |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 06.04.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் கெண்டேனஹள்ளியில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு மாரண்டஹள்ளியில் பஸ் ஸ்டேன்டு திரௌபதியம்மன் கோவில் அருகே நானும் முருகனும் பேசி கொண்டிருந்தோம். அப்போது மாரண்டஹள்ளி போலீசார் எங்களை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். என் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். என் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் 13.05.2024ம் தேதி மாலை 4.15மணிக்கு நானும் மாரண்டஅள்ளி காந்தி நகரை சேர்ந்த கோவிந்தன் மகன் வேல்முருகன் என்பவரும் பஸ் நிலையம் அருகே உள்ள திரௌபதி அம்மன் கோயில் அருகே நின்று பேசி கொண்டிருந்தோம் என்றும், அப்போது மாரண்டஅள்ளி வட்ட காவல் ஆய்வாளராகிய தாங்கள் என்னையும் வேல்முருகனையும் காவல் நிலையம் அழைத்து காவல் நிலையத்தில் காவல்படுத்தியிருந்த இருவரை காட்டி அதில் ஒருவர் வழக்கறிஞர் கோவிந்தசாமி என்றும், மற்றொருவர் சட்ட கல்லூரியில் பயின்று வரும் ரவி என்றும் இவர்கள் இருவரும் 12.05,2024ம் தேதி விடியற்காலை 04.30மணிக்கு பாலக்கோடு தீர்த்தகிரி நகரை சேர்ந்த பெருமாள் மகன் கோவிந்தன் என்பவருக்கும் வக்கீல் கோவிந்தசாமி என்பவருக்கும் உள்ள நிலப்பிரச்சனை தொடர்பாக கோவிந்தனை கொலை செய்ய வக்கீல் கோவிந்தசாமியிடம் ஜூனியர்களாக வேலை செய்யும் கார்த்திக், கோவிந்தராஜ், அரவிந்த் மற்றும் வக்கீல் கோவிந்தசாமியின் உறவினர் சாந்தகுமார் ஆகியோர்களுடன் சேர்ந்து சதி திட்டம் தீட்டி வாகனங்களை மோதவிட்டு கொலை செய்து விட்டு விபத்து போல் சித்தரித்து விடலாம் என்று முடிவு செய்து,

*2)* மேற்படி நபர்கள் பொப்பிடி - மாரண்டஅள்ளி ரோட்டில் கோவிந்தன் அவருடைய இருசக்கர வாகனத்தில் வந்த போது ASHOK

LEYLAND DOST நான்கு சக்கர வாகனத்தையும் TATA INDIGA காரையும் மற்றும் இரு சக்கர வாகனத்தையும் மோதி கோவிந்தனை கொலை செய்ய முயற்சித்த போது லேசான காயங்களுடன் தப்பித்து பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் மாரண்டஅள்ளி காவல் நிலைய குற்ற எண் 98/ 2024 சட்டபிரிவு 147, 148, 294(பி), 324, 307 இதச ஆக வழக்கு பதிவு இங்குள்ள எதிரிகளை காவல் உதவி ஆய்வாளர் திருவண்ணாமலை மாவட்டம், தானிபாடியில் கைது செய்து கொண்டு வந்துள்ளவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டியுள்ளதாலும், அதற்கு சாட்சிகளாக என்னையும் என்னுடன் இருந்த வேல்முருகன் என்பவரையும் சாட்சிகளாக உடன் இருக்க கேட்டு கொண்டதின் பேரில் நாங்கள் அதற்கு சம்மதம் தெரிவித்து காவல் ஆய்வாளராகிய தாங்கள் 1ம் எதிரி வக்கீல் கோவிந்தசாமியிடம் 18.15 மணிக்கும், 3ம் எதிரி ரவியிடம் 17.40 மணிக்கும் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தீர்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும்,

3) 14.05.2024ம் தேதி காலை 08.00மணிக்கு மீண்டும் எங்கள் இருவரையும் காவல் ஆய்வாளராகிய தாங்கள் வரவழைத்து எதிரி வக்கீல் கோவிந்தசாமியையும் எங்களையும் காவல் வாகனத்தில் ஏற்றி

கொண்டு கோவிந்தசாமி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் கோவிந்தலை கொலை செய்ய கத்தியை வைத்து கொண்டு துரத்திய பொப்பிடி - பாலக்கோடு ரோட்டில் பூமரத்துப்பள்ளம் தரைப்பலத்தில் அடியில அறைத்து வைத்திருந்ததை காலை 8.45மணிக்கு ஆஜர்படுத்தியதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினீர்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை**

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.38 of 2025**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W.13 (L.W.14) | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | **திரு. வேல்முருகன்** |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 06.04.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் மாரண்டஹள்ளியில் காந்தி நகரில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு மாரண்டஹள்ளியில் பஸ் ஸ்டேன்டு திரௌபதியம்மன் கோவில் அருகே நானும் என்னுடைய நண்பர் ராஜியும் பேசி கொண்டிருந்தோம். அப்போது மாரண்டஹள்ளி போலீசார் எங்களை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். என் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். என் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது.என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். ஒரே நாளில் தான் இரண்டு கையொப்பங்களும் போட்டேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.22**ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் 13.05.2024ம் தேதி மாலை 4.15மணிக்கு நானும் கெண்டேனஅள்ளியை சேர்ந்த பெருமாள் மகன் ராஜி என்பவரும் பஸ் நிலையம் அருகே உள்ள திரௌபதி அம்மன் கோயில் அருகே நின்று பேசி கொண்டிருந்தோம் என்றும், அப்போது மாரண்டஅள்ளி வட்ட காவல் ஆய்வாளராகிய தாங்கள் என்னையும் வேல்முருகனையும் காவல் நிலையம் அழைத்து காவல் நிலையத்தில் காவல்படுத்தியிருந்த இருவரை காட்டி அதில் ஒருவர் வழக்கறிஞர் கோவிந்தசாமி என்றும், மற்றொருவர் சட்ட கல்லூரியில் பயின்று வரும் ரவி என்றும் இவர்கள் இருவரும் 12.05.2024ம் தேதி விடியற்காலை 04.30மணிக்கு பாலக்கோடு தீர்த்தகிரி நகரை சேர்ந்த பெருமாள் மகன் கோவிந்தன் என்பவருக்கும் வக்கீல் கோவிந்தசாமி என்பவருக்கும் உள்ள நிலப்பிரச்சனை தொடர்பாக கோவிந்தனை கொலை செய்ய வக்கீல் கோவிந்தசாமியிடம் ஜீனியர்களாக வேலை செய்யும் கார்த்திக், கோவிந்தராஜ், அரவிந்த் மற்றும் வக்கீல் கோவிந்தசாமியின் உறவினர் சாந்தகுமார் ஆகியோர்களுடன் சேர்ந்து சதி திட்டம் தீட்டி

வாகனங்களை மோதவிட்டு கொலை செய்து விட்டு விபத்து போல் சித்தரித்து விடலாம் என்று முடிவு செய்து,

2) மேற்படி நபர்கள் பொப்பிடி - மாரண்டஅள்ளி ரோட்டில் கோவிந்தன் அவருடைய இருசக்கர வாகனத்தில் வந்த போது ASHOK LEYLAND DOST நான்கு சக்கர வாகனத்தையும் TATA INDIGA காரையும் மற்றும் இரு சக்கர வாகனத்தையும் மோதி கோவிந்தனை கொலை செய்ய முயற்சித்த போது லேசான காயங்களுடன் தப்பித்து பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் மாரண்டஅள்ளி காவல் நிலைய குற்ற எண் 98/ 2024 சட்டபிரிவு 147, 148, 294(பி), 324, 307 இதச ஆக வழக்கு பதிவு இங்குள்ள எதிரிகளை காவல் உதவி ஆய்வாளர் திருவண்ணாமலை மாவட்டம், தானிபாடியில் கைது செய்து கொண்டு வந்துள்ளவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டியுள்ளதாலும், அதற்கு சாட்சிகளாக என்னையும் என்னுடன் இருந்த வேல்முருகன் என்பவரையும் சாட்சிகளாக உடன் இருக்க கேட்டு கொண்டதின் பேரில் நாங்கள் அதற்கு சம்மதம் தெரிவித்து காவல் ஆய்வாளராகிய தாங்கள் 1ம் எதிரி வக்கீல் கோவிந்தசாமியிடம் 16.15 மணிக்கும், 3ம் எதிரி ரவியிடம் 17.40 மணிக்கும் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தீர்கள் என்றும், அந்த

ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும்,

3) 14.05.2024ம் தேதி காலை 08.00மணிக்கு மீண்டும் எங்கள் இருவரையும் காவல் ஆய்வாளராகிய தாங்கள் வரவழைத்து எதிரி வக்கீல் கோவிந்தசாமியையும் எங்களையும் காவல் வாகனத்தில் ஏற்றி கொண்டு கோவிந்தசாமி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் கோவிந்தலை கொலை செய்ய கத்தியை வைத்து கொண்டு துரத்திய பொப்பிடி - பாலக்கோடு ரோட்டில் பூமரத்துப்பள்ளம் தரைப்பலத்தில் அடியில் அறைத்து வைத்திருந்ததை காலை 8.45மணிக்கு ஆஜர்படுத்தியதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினீர்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை**

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.38 of 2025**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W.14 (L.W.15) | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | **திரு. ஹரிஷ்** |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 06.04.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் காவேரிபட்டினத்தில் குடியிருக்கிறேன். நான் மொபைல் கடையில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. கோபி யார் என்று எனக்கு தெரியாது. என் மாமா ராஜ்குமாருக்கு டாடா இண்டிகோ TN 24 S 6935 என்ற டார்க் மெரூன் கலர் கார் உள்ளது. பழனியம்மாள் என்பவர் என் அப்பாவின் சித்தி. அவர் மருத்துவமனைக்கு போக வேண்டும் என்று கார் கேட்டதால் அவர்களை குமார் என்பவர் காரை ஓட்டி கொண்டு சென்றார். பிறகு 2 நாட்கள் கழித்து காரை கேட்டபோது கிருஷ்ணகிரி காவல் நிலையத்தில் கார் இருப்பதாக சொன்னார். அங்கு போனபோது அங்கு கார் இல்லை என்று தெரிந்தது பிறகு 2 நாட்கள் கழித்து மாரண்டஹள்ளி சென்றபோது காரின் முன்பக்கம் சேதமாகி இருந்தது. நான் காரை திரும்ப கேட்டபோது வழக்கு நடைபெற்று கொண்டிருந்தால் பிறகு வாங்கி கொள்ளுமாறு சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கார் தான் அது. டார்க் மெரூன் கலர் காரின்

புகைப்படங்கள் **அ.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் ராமேநத்தம் கிராமத்தில் எனது அப்பா அம்மாவுடன் குடியிருந்து கொண்டு காரிமங்கலத்தில் செல்போன் கடையில் வேலை செய்து வருகிறேன் என்றும், எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்றும், என்னுடன் பிறந்த நந்தினி என்ற தங்கை உள்ளாள் என்றும், அவளுக்கு திருமணமாகிவிட்டது என்றும், எனக்கும் எலுமிச்சனஅள்ளியை சேர்ந்த கோபி என்பவரும் கடந்த 2016ம் ஆண்டு 11ம் வகுப்பு படிக்கும் போது இருந்தே எனக்கு தெரியும் என்றும், அப்போது இருந்து நாங்கள் இருவரும் நண்பர்களாக பழகி வருகிறோம் என்றும், கடந்த 12.05.2024ம் தேதி மாலை சுமார் 6 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது கோபி எனக்கு போன் செய்து நான் ஆஸ்பிட்டலுக்கு போகனும் எனக்கு ஒரு கார் ஏற்பாடு செய்து கொடு என்று என்னிடம் கேட்டான் என்றும், நான் என்னிடம் இல்லை என் மாமா ராஜ்குமாரிடம் கார் உள்ளது

நான் வாங்கி தருகிறேன் என்று சொன்னேன் என்றும், கார் எடுத்துட்டு போன திருப்பி கொடுக்க எவ்வளவு நேரம் ஆகும் என்று கேட்டேன் என்றும், அதற்கு அவன் ஆஸ்பிட்டல எவ்வளவு நேரம் ஆகும் என்று எனக்கு தெரியவில்லை என்றும், ஆனால் இரவுக்குள் வந்து விடுவோம் என்று கூறினார் என்றும்,

2) நான் சரி என்று சொல்லிவிட்டு சர்வீஸ் செய்ய கொடுத்திருந்த காரை சர்வீஸ் செய்து என் சித்தி வீட்டாண்ட நிறுத்தியிருந்த என் மாமா ராஜ்குமாரின் TN 24 S 6935 என்ற பதிவு எண் கொண்ட TATA INDIGO காரை 6.30மணிக்கு கோபி வந்ததும் அவனிடம் கொடுத்தேன் என்றும், கோபி எடுத்து சென்று விட்டான் என்றும், அடுத்த நாள் 13.05.,2024ம் தேதி காலை 08.00மணிக்கு என் மாமா எனக்கு கால் செய்து என்ன பிரச்சனை வண்டி எங்க இருக்கு என என்னிடம் கேட்டார் என்றும், நான் என் நண்பன் கோபியிடம் காரை கொடுத்தேன் என்று சொன்னேன் என்றும், அதன் பின்பு என் மாமா என்னிடம் மாரண்டஅள்ளி காவல் நிலையத்தில் இருந்து கால் செய்து இருந்ததாக என கூறினார் என்றும், என்ன பிரச்சனை என்று என் மாமாவிடம் கேட்டேன் என்றும், உன் நண்பர் கோபி கொலை முயற்சிக்கு துணை போயிருப்பதாக போலீஸ் சொன்னதாக என்னிடம் சொன்னார் என்றும்,

3) அதன் பின்பு நான் அந்த போன் நெம்பரை வாங்கி நான் போலீசுக்கு போன் செய்தேன் என்றும், போலீசிடம் நான் தான் கோபிக்கு காரை கொடுத்தது என சொன்னேன் என்றும், அதன்பின்பு தான் கோபி மற்றும் அவரது வக்கீல் நண்பர்கள் ஒன்று சேர்ந்து வாகனத்தை மோதி கொலை முயற்சி செய்து இருப்பதாகவும் வழக்கு பதிவு செய்திருப்பதாக சொன்னார் என்றும், அதன் பின்பு நான் கோபிக்கு போன் செய்த போது அவன் போன் சுட்ஆப் ஆகி இருந்தது என்றும், நான் அவனை பல இடங்களில் தேடி பார்த்தேன் எங்கும் கிடைக்கவில்லை என்றும், அதனால் இந்த சம்பவத்தை பற்றி மாரண்டஅள்ளி காவல் ஆய்வாளரிடம் சொன்னேன் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)</u>**

**பழனியம்மாள் சொல்லி குமார் தான் காரை ஓட்டி சென்றார்.**

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.38 of 2025**

Deposition of P.W.15 (L.W.16) } Prosecution } Defence }

Name of the Witness : **திரு. எல்லப்பன்**

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 06.04.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் பர்கூரில் மள்ளபாடியில் குடியிருக்கிறேன். நான் தோஸ்த் வண்டி ஓட்டுகிறேன். எனக்கு சொந்தமான தோஸ்த் வண்டியின் பதிவு எண். TN 24 AR

5449. எங்கள் ஊரை சேர்ந்த சுப்ரமணிக்கு ஒரு வருடத்திற்கு முன்பு ரூ.7,00,000/– க்கு விற்பனை செய்துவிட்டேன். அவர் முன்பணமாக ரூ.30,000/– பணம் கொடுத்தார். மீதி பணத்திற்கு இன்று நாளை என்று சாக்குபோக்கு சொன்னார். பிறகு மாரண்டஹள்ளி காவல் நிலையத்திலிருந்து போன் செய்து உனக்கு சொந்தமான வண்டி அடிபட்டுவிட்டது என்று சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வண்டி என்னுடையதுதான். அந்த புகைப்படம் **அ.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் சுப்ரமணிக்கு கொடுத்துவிட்டதாக தகவல் சொன்னேன். வண்டிக்கு எப்படி அடிபட்டது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் நான் மலப்பாடி கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு டிரைவர் வேலை செய்து வருகிறேன் என்றும், எனக்கு திருமணமாகி 4 மகன்கள் உள்ளனர் என்றும், கடந்த 05.05.2024ம் தேதி எலுமிச்சனஅள்ளி கிராமத்தை சேர்ந்த சுப்பிரமணி என்பவரிடம்

என்னுடைய TN 24 AR 5449 என்ற பதிவு எண் கொண்ட ASHOK LYLAND DOST என்ற நான்கு சக்கர வாகத்தை 7 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்து விட்டேன் என்றும், அதற்கு அவர் ரூபாய் 30,000/ மட்டும் அட்வான்ஸ் ஆக கொடுத்தார் என்றும் மீதி பணத்தை ஒரு மாதம் கழித்து தருவதாக சொன்னார் என்றும், தற்போது 12.05.2024ம் தேதி நான் விற்பனை செய்த தோஸ்ட் வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளதாக கேள்விப்பட்டு பொப்பிடி கிராமத்திற்கு சென்று பார்த்தேன் என்றும், அங்கு விசாரித்ததில் சீனியர் வக்கீல் உடன் அவருடைய ஜீனியர் வக்கீல்கள் எல்லாரும் சேர்ந்து பாலக்கோடு கோவிந்தன் என்பவரை வாகனம் மோதி கொலை முயற்சி செய்து இருப்பதாக கேள்விப்பட்டேன் என்றும், போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)–இல்லை**

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.38 of 2025**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W.16 (L.W.17) | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | **திரு. சுப்ரமணி** |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 06.04.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் எலுமிச்சனஹள்ளியில் குடியிருக்கிறேன். நான் டிரைவராக வேலை செய்கிறேன். எல்லப்பன் என்பவரிடமிருந்து தோஸ்த் வண்டியை 2024ல்

வாங்கினேன். ரூ.7,00,000/–க்கு பேசி ரூ.30,000/– முன்பணம் கொடுத்து வண்டியை வாங்கினேன். வண்டியை வாடகைக்கு விட்டு தொழில் செய்து வந்தேன். கிருஷ்ணன் என்பவர் தக்காளி லோடு ஓட்டுவதற்காக வண்டியை வாடகைக்கு எடுத்து சென்றார். நாங்கள் புதுக்கோட்டையில் உள்ள கோவிலுக்கு சென்றுவிட்டோம். 11.00 மணியளவில் எல்லப்பன் எனக்கு போன் செய்து வண்டி விபத்துக்குள்ளாகிவிட்டது என்று சொன்னார். அடுத்த நாள் நான் ஊருக்கு வந்து எல்லப்பனை விசாரித்தேன். கோபி என்பவரை தெரியும். என் பக்கத்து வீட்டுக்காரர். போலீசார் என்னை போனில் இரண்டு முறை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)**

கிருஷ்ணன் வாகன்கொட்டாயை சார்ந்தவர். இறந்து 6 மாதங்கள் ஆகிவிட்டது.

மறு விசாரணை – இல்லை

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.